
# விசுவாசிகள் இணைந்து பணியாற்ற தேவன் உதவி செய்கிறார்

## சரியான முறையிலான தலைமையைக் குறித்து சிறுவர்களுக்குப் போதியுங்கள்

குழந்தைகளுக்கான பின்வரும் நடவடிக்கைகளில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளலாம்.

**ஜெபம்:** "கர்த்தாவே, சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட அங்கமாக நாங்கள் இணைந்து செயல்பட உதவி செய்வீராக."



**நெகேமியா கூறினார், ì நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் சத்தத்தைக் கேட்கிறீர்களோ அவ்விடத்திலே வந்து, எங்களோடே கூடுங்கள்: நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் செய்வார். î**

எக்காளம் ஒன்றின் படத்தை **வரைக.**

- இஸ்ரவேலரின் எக்காளகங்கள் என்பது உள்ளே துளை உடைய ஆடுகளின் கொம்பே.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவட்டும்.
- அடுத்த ஆராதனை வேளையின் போது சிறுவர்கள், படத்தை, பெரியவர்களுக்குக் காட்டி, இது, தமது மக்களை இணைந்து பணியாற்ற அழைக்கும்படி தேவன் தெய்வபக்தி உள்ள தலைவர்கள் உபயோகிக்கிறார் என்பதைக் காட்டுகிறது என்று விளக்கவும்.

**நெகேமியா 4:1-23** லிருந்து நெகேமியாவின் கதையை ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஆசிரியரோ வாசிக்கட்டும் அல்லது சொல்லட்டும். தேவனுக்கு மகிமை கொண்டு வந்த ஒரு கட்டிடத் திட்டத்தைச் செய்ய ஒரு தெய்வ பக்தியுள்ள தலைவர் எவ்வாறு தமது மக்களை ஒருங்கிணைத்தார் என்பதை முதலில் கவனித்துக் கண்டறியுமாறு பிள்ளைகளிடம் கேட்டுக் கொள்ளவும்.

கதையைக் கூறிய பின், பின்வரும் கேள்விகளைக் கேட்கவும். (பிள்ளைகள் பதில் கூற முடியவில்லை என்றால் மட்டுமே பதிலைச் சொல்லுங்கள்).

- எருசலேமைச் சுற்றி இருந்த மதிலைப் பற்றி இஸ்ரவேலின் எதிரிகள் என்ன பேசிக் கொண்டார்கள்? *(வச.2)*
- தனது எதிரிகள் தன்னை மிரட்டிய போது உதவிக்காக நெகேமியா யாரிடம் சென்றார்? *(9)*
- தேவனிடம் ஜெபித்த பிறகு, மதிலைக் காப்பாற்ற நெகேமியா என்ன செய்தார்? *(13)*
- மதிலைக் கட்டுவதற்கு இஸ்ரவேலர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தார்கள்? *(6)*
- மக்கள் வேலை செய்தபோது நெகேமியா என்ன செய்து கொண்டு இருந்தார்? *(23)*
- தங்கள் முழு இருதயத்தோடும் வேலை பார்க்கும்படி நெகேமியா மக்களை எவ்வாறு ஊக்கப்படுத்தினார்? *(பதில். நெகேமியா மக்களை ஜெபிக்குமாறு செய்தார். பின் அவர் பணிகளை ஒருங்கிணைத்தார். தேவ வல்லமையைப் பற்றிய உறுதியை அளித்தார். ஒரு கடுமையான உழைப்பாளிக்கு ஒரு முன் மாதிரியாக சேவை செய்தார்.)*

நெகேமியா 4:1-23 லிருந்து, நெகேமியாவின் கதையை **நாடகமாக்குக.**

- இந்த நாடகத்தைச் சிறுவர்கள் அரங்கேற்ற சபைத்தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும். உங்கள் நேரத்தை ஒதுக்கி பிள்ளைகள் ஆயத்தம் செய்ய உதவவும். சிறிய பிள்ளைகளுக்கு பெரிய பிள்ளைகள் உதவவும்.
- **பெரிய பிள்ளைகளோ** அல்லது பெரியவர்களோ இந்த வேடங்களை ஏற்கலாம்.

  **கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறி பிள்ளைகள் பேச வேண்டியதை ஞாபகப்படுத்துபவர்.

  **நெகேமியா:** ஒரு கையில் ஈட்டியும் இன்னொரு கையில் சுத்தியல் போன்ற ஒரு கருவியையும் வைத்துக் கொள்ள வேண்டும்.

- **சிறுபிள்ளைகள்** பின்வரும் வேடங்களைத் தாங்கலாம்.

  **இஸ்ரவேலர்கள்:** கட்டிடத்துக்கான கல்லும் ஈட்டியும் வைத்துக் கொள்ளவும்.

  **எதிரிகள்:** ஈட்டி பிடித்துக் கொள்ளவும்.

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியைக் கூறுக (வசனம் 1 & 2)

**இஸ்ரவேலர்கள்:** சுவர் கட்டுவது போல் நடிக்கவும்.

**கதை கூறுபவர்:** "நெகேமியாவும் இஸ்ரவேலர்களும் எருசலேம் நகரைச் சுற்றி ஒரு மதிலை கட்டி வருகின்றனர். அவர்களது எதிரிகள் அதைக் குறித்து ஏளனம் செய்கின்றனர். எதிரிகள் கூறுவதைக் கேளுங்கள்."

**எதிரிகள் :** நகைத்து இது போல பலவகையாகப் பேசுகின்றனர். "அந்த முட்டாள் இஸ்ரவேலர்கள் இப்போது எதைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள்?" அது ஒரு சுவரா?" "அது ஒரு கற்குவியலைப் போல கிடக்கிறது!" "ஒரு நரி ஏறினால் கூட அது விழுந்து விடும்."

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாவது பகுதியை வசனம் 6-14 லிருந்து கூறவும். "நெகேமியா கூறுவதைக் கேளுங்கள்."

**நெகேமியா:** "முதலில் நாம் சேர்ந்து உதவிக்காக தேவனிடம் ஜெபிப்போம். 'தேவன்!' இந்த வேலையை நாங்கள் உமக்காக முடிக்கும்படி உதவி செய்யும், இப்போதும் மக்களே, நமது எதிரிகளின் பேச்சை கவனிக்க வேண்டாம். நாம் இந்தப் பணியை செய்ய ஒன்றிணைந்து தொடர்ந்து தேவனுக்காக உழைப்போம்."

**இஸ்ரவேலர்கள்:** "நாங்கள் எங்கள் முழு மூச்சோடும் உழைப்போம்." (ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளுகின்றனர்) "நீ இந்தப் பகுதியைக் கட்டுகிறாய் என்றால் நான் அந்தப் பக்கம் கட்டுகிறேன்!"

**கதை கூறுபவர்:** வசனம் 15-23 லிருந்து மூன்றாவது கதைப் பகுதியைக் கூறவும். பின் கூறுவது, "நெகேமியா கூறுவதைக் கேளுங்கள்."

**நெகேமியா:** "எல்லோரும் தங்கள் தங்கள் ஆயுதங்களை அருகில் வைத்துக் கொள்ளுங்கள். எக்காள சத்தத்தைக் கேட்டும் போது மதிலை காக்க வாருங்கள். எப்போதும் ஆயத்தமாய் இருங்கள். நாம் ஒரு கையால் வேலையைப் பார்த்துக் கொண்டே அடுத்த கையால் வாளைத் தூக்குவோம்.!"

**இஸ்ரவேலர்கள்:** "இதோ! மதில் வலிமையாக உள்ளது!"

"நாம் ஏறத்தாழ முடித்து விட்டோம்!"

"நெகேமியா எவ்வளவு கடினமாக உழைக்கிறார் பாருங்கள்!"

"அவர் நமக்கு ஒரு சிறந்த உதாரணம்."

**கதை கூறுபவர்:** அல்லது ஒரு பெரிய குழந்தை உதவி செய்த யாவருக்கும் நன்றி கூறவும்.

பிள்ளைகள் பெரியவர்களுக்கு இந்த நாடகத்தை நடத்திக் காட்டினால், கூடவே ஆரம்பத்தில் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளைப் பெரியவர்களிடம் கேட்கவும்.

**சங்கீதம்:** 2:1,2,10,11 ஆகிய வசனங்களை மூன்று சிறுவர்கள் ஒப்புவிப்பார்களாக.

**கேள்வி:** இணைந்து கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்யும் போது நமக்கு தெய்வபக்தியுள்ள நெகேமியாவைப் போன்ற தலைவர்கள் தேவை என்பதற்கு உதாரணமாக விளங்கும் சூழ்நிலைகள் எவை? (பிள்ளைகள் உதாரணம் தரட்டும்).

**மனப்பாடம் செய்க:** யோவான் 17:23.

இயேசுவுக்காக இணைந்து பணியாற்றுவது பற்றி பெரிய பிள்ளைகள் கவிதை, பாடல் நாடகம் போன்றவற்றை எழுதலாம்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, நீர் எல்லாவற்றிற்கும் மேலான இராஜா. ஒருவரும் உம்மைத் தோற்கடிக்க முடியாது. உமது உதவியால் நாங்கள் எங்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டு, ஒருவருக்கு ஒருவர் உதவியும் செய்ய முடியும். முதலில் உமது உதவியைக் கேட்கும்படி எங்களுக்கு உதவி செய்யும். நாங்கள் எங்கள் முழு மனதோடு ஒருவருக்கொருவர் சேவை செய்ய உதவும்."



Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net